## அரசின் இறைத் தொழிற்பாடுகள்

நிதிச் சமமின்மை காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் பெருமளவிற்கு நிலையற்ற தன்மையைக் கொண்டிருந்த ஒரு ஆண்டினைத் தொடர்ந்து அரசின் இறைத் தொழிற்பாடுகள் 1981இல் அடையப்பட்ட முன்னேற்றமான மட்டத்திலிருந்து வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளில் சற்று மாறான நிலையைக் காட்டின.

### இறை வெளிப்பாடு

1982 இல் மொத்த அரச செலவினம் ரூ. 380,970 இலட்சமாக அமைந்து 1981 இனைவிட 23 சதவீதம் கூடுதலாக விளங்கியது. நடைமுறை விலைகளிலான மொஉஉ இன் சதவீதமாக ஒப்பிடுகையில் இது 36.6சதவீதத்திலிருந்து 1982 இல் 38.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. மீண்டெழும் செலவு முன்னைய ஆண்டினைவிட 8.5 சதவீதத்தினால் அதிகரித்து ஆய்வுக்குரிய ஆண்டில் ரூ. 192,300 இலட்சமாக விளங்கியது. ரூ. 178,090 இலட்சமாக அமைந்த அரசிறையின் அதிகரிப்பு வீதம் 10சதவீதமாக மட்டும் விளங்கியமையால் வரவு செலவுத்திட்டத்தின் நடைமுறைக் கணக்கு ரூ. 14,210 இலட்சம் கொண்ட பற்றுக்குறையை எடுத்துக்காட்டியது. 13 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிக் கொடுப்பனவுகளைப் பதிவு செய்த முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளில் ரூ. 8,830 இலட்சம் கொண்ட தேறிய உள்வரவைக்கொண்ட சாதகமான அபிவிருத்தி காணப்பட்டபோதிலும் இப் பற்றுக்குறை ஏற்பட்டது. இம்முன்னேற்றம் ஏற்படாதிருப்பினும் கடந்த சில ஆண்டுகளில் பாதகமான முற்பணக்கணக்குத் தொழிற்பாடுகள் நீங்கலான நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட மிகைக்கு மாறாக நடைமுறைக் கணக்கு குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாண்டின் மூலதனச் செலவு ரூ. 188,670 இலட்சமாக அமைந்து 1981இனைவிட 41சதவீத அதிகரிப்பைக் காட்டியது. முழு வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறை 1982இல் ரூ. 202,890 இலட்சமாக அமைந்து மொஉஉ வின் சதவீதமாக நோக்குகையில் 1981 இன் 17 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 20 சதவீதமாக விளங்கியது.

உள்நாட்டு வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட மூலவளங்களைக் கொண்டு பற்றுக்குறை நிதியிடப்பட்டது. உள்நாட்டு மூலங்கள் 54 சதவீதத்தினை நிதியிடப் பயன்படுத்தப்பட்ட வேளையில் மீதித் தொகை வெளிநாட்டு மூலவளங்களினால் நிதியிடப்பட்டது. மொத்த இலக்கான வெளிநாட்டு நிதி ரூ. 141,980 இலட்சத்திற்கு மாறாக ரூ. 92,700 இலட்சமாக அமைந்தது. செயற்றிட்ட, பண்ட, காசுக் கடன்களையும் உள்ளடக்கிய ஏனைய கடன்கள் முறையே ரூ. 32,560 இலட்சம், ரூ. 13.550 இலட்சம் ரூ. 10,900இலட்சமாக அமைந்தவேளையில் நன்கொடைகள் ரூ. 35,690 இலட்சமாக விளங்கின.

உள்நாட்டு மூலவளங்களில் வங்கியல்லாச் சந்தைக் கடன்பாடுகள் மூலமதிப்பீடாகிய ரூ. 40,000 இலட்சத்திற்கு எதிராக ரூ. 58,940 இலட்சமாக விளங்கின. சந்தையல்லாக் கடன்பாடுகள் ரூ. 13,540இலட்சத்தினை வழங்கின. இம்மூலவளங்

## அட்டவணை 1.44

## அரசின் இறைத் தொழிற்பாடுகள் 1979—1982

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1979 | 1980 | 1981 | 1982 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1982 தற்காலிக மானவை |
|---|---|---|---|---|---|
| 1. அரசிறை (அ) .. | 12,730 | 14,068 | 16,228 | 19,311 | 17,809 |
| 2. மீண்டெழும் செலவு .. | 11,502 | 13,249 | 16,005 | 20,664 | 20,113 |
| 3. முற்பணக் கணககுத் தொழிற்பாடுகள் (வெளிக்கொடுப்பனவு—/ உட்கொடுப்பனவு+) .. | -1,028 | -3,240 | -1,716 | + 100 | + 883 |
| 4. நடைமுறைக் கணக்கு (மிகை+ / குறை—) | +200 | -2,421 | -1,493 | - 1,253 | -1,421 |
| 5. மூலதனச் செலவு | 8,991 | 13,854 | 13,373 | 19,915 | 18,867 |
| அதில் கடன் கரைப்பு நிதியமும், கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும் பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகளும் ... | (1,182) (ஆ) | (1,502) (ஆ) | (1,608) (ஆ) | (2,806) | (2,612) (ஆ)* |
| 6. வரவு செலவுத் திட்டக்குறை .. | 8,791 | 16,274 | 14,866 | 21,168 | 20,289 |
| 7. குறையை நிதியிடல் | | | | | |
| 7-1 உள்நாட்டு மூலங்கள் .. | 4,582 | 9,610 | 6,696 | 6,970 | 11,253 |
| (அ) வங்கியல்லா சந்தைக் கடன் பாடுகள் ... | 2,806 | 2,700 | 2,379 | 4,000 | 5,894 |
| (ஆ) சந்தையல்லாக் கடன்பாடுகள் .. | 1,096 | - 216 | 400 | — | 1,354 |
| (இ) வங்கித் தொழில் முறை (இ) ... | 680 (ஈ) | 7,126 (ஈ) | 3,917 (ஈ) | 2,970 | 4,006 (ஈ) |
| 7-2 வெளிநாட்டு மூலங்கள் ... | 4,237 | 6,735 | 8,208 | 14,198 | 9,270 |
| (அ) பண்டக் கடன்கள் ... | 1,415 | 1,431 | 1,722 | | 1,355 |
| (ஆ) செயற்றிட்ட கடன்கள் .. | 830 | 1,.71 | 2,064 | | 3,256 |
| (இ) ஏனைய கடன்கள் .. | 602 | 1,513 | 1,701 | 14,198 | 1,090 |
| (ஈ) நன்கொடைகள் ... | 1,390 | 2,620 | 2,721 | | 3,569 |
| 7-3 பண நிலுவைகளின் பயன்பாடு .. | - 28 | - 72 | - 38 | — | - 235 |
| 8. அரச இறைத் தொழிற்பாடுகளின் விரிவுத் தாக்கம் ... | 634 | 7,029 | 3,847 | 2,970 | 3,755 |

மூலங்கள்: திறைசேரி.
இலங்கை மத்திய வங்கி.

(அ) வெளிநாட்டு நன்கொடைகளின் கீழ் காட்டப்பட்ட அரசிறை மூலதன நன்கொடைகளை உள்ளடக்காது.

(ஆ) 1979 இன் ரூ. 1780 இலட்சம், 1980இன் ரூ. 2710 இலட்சம், 1981இன்ரூ. 1370 இலட்சம் 1982 இன் ரூ. 490 இலடசம் கொண்ட வெளிநாட்டு நிருவாக கடன்பாடுகளின் மீளளிப்புக்களையும் உள்ளடக்கும்.

(இ) பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகளை செலுத்துவதற்காக மத்திய வங்கியிடமிருந்தான சிறப்பான முற்பணங்களையும் உள்ளடக்கும்.

(ஈ) வங்கித் தொழில்முறையுடனான ரூபாக் கடன்களின் மீளளிப்புக்கான 1979 இல் 180 இலட்சம், 1980இல் 250 இலட்சம், 1981 இல் 320 இலட்சம் 1982இல் 160 இலட்சம் ஆகியவற்றினை உள்ளடக்குகிறது.

* திறைசேரி ஏடுகளிலிருந்து ரூ, 30 இலட்சத்தினால் வேறுபடுகின்றது.

# அரசாங்கத்தின் அரசிறையும் செலவும்

நிதியாண்டுகளின்படியான தரவுகள்




இலங்கை மத்திய வங்கி

கள் அனைத்தும் பொதுவான குறையை நிரப்புவதற்கு இன்னும் போதாமல் இருந்தமையால் வங்கித்துறையிடமிருந்து ரூ. 40,060 இலட்சம் பெறப்பட வேண்டியிருந்தது. தற்போதுள்ள ரூபாக் கடன்களின் மீளக் கொடுப்பனவாகிய ரூ. 160 இலட்சத்துடனும் பண நிலுவைகள் ரூ. 2,350இலட்சத்தினால் உயர்த்தப்பட்டமையினாலும் இறைத் தொழிற்பாடுகளின் விரிவுத் தாக்கம் இவ்வாண்டில் ரூ. 37,550 இலட்சமாக அமைந்தது.

1982இற்கான இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு அட்டவணை 1.44 இல் தரப்பட்டுள்ளது. அரச இறைத்தொழிற்பாடுகள் தொடர்பான தேறிய பணக்குறை கடந்த ஒன்பது ஆண்டுகளுக்குரிய ஒப்பிடத்தக்க தரவுகளுடன் புள்ளிவிபரப் பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது.

## அரசிறை

அரசின் மொத்த அரசிறை 1982இல் ரூ. 178,090இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினைவிட 10சதவீத அதிகரிப்பைக் காட்டியது. வரி அரசிறை 9சதவீதத்தால் அதிகரித்து மொத்த அரசிறையில் 87சதவீதமாக விளங்கிய வேளையில் வரியல்லாத அரசிறை 17 சதவீதத்தால் அதிகரித்து மொத்த அரசிறையில் 13 சதவீதமாக விளங்கியது. வரி அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பு பெருமளவிற்கு மொத்த விற்பனை வரிகள், வருமானவரிகள் என்பவற்றில்ஏற்பட்ட கூடியளவு அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும். இதன் ஒன்றிணைந்த விளைவு ஏற்றுமதித் தீர்வைகளிலிருந்து கிடைத்த சேகரிப்புக்களில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியினால் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. பல்வகை வரவுகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்கள் காரணமாக வரியல்லாத அரசிறை அதிகரித்தது.

எனினும் அரசிறை வளர்ச்சியின் மட்டம் சாதாரண மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் பார்க்க குறைவாக விளங்கியது. இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசிறை 1981இன் 19சதவீதத்திலிருந்து 1982இல் 18சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது கடந்த பத்து ஆண்டுகளிலும் ஆகக்குறைந்த விகிதாசாரமாக விளங்கி தேசிய வருமானத்தின் வளர்ச்சியுடன் ஒத்துப்போவதற்கு தற்போதுள்ள வரியமைப்பில் இரண்டறக்கலந்துள்ள குறைபாட்டினைக் காட்டியது அரசிறை, வரிகள் என்பவற்றின் வளர்ச்சி விகிதாசாரம்பற்றிய தற்காலிக கணிப்பின் படி அரசிறை, வரிகள்[1] என்பவற்றின் தொடர்பு குணகங்கள் முறையே 0.553;0.486 என்பவற்றிலிருந்து முறையே 0.541 இற்கும் 0.479 இற்கும் வீழ்ச்சியை அடைந்து இவ்வாண்டின் அரசிறையின் திரட்டலில் மோசமான செயலாற்றத்தினை எடுத்

1. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான அரசின் அரசிறை (ஈ ஆர்) வரி அரசிறை (ஈ ரி) யின் தொடர்பு விகிதங்கள் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

$$\text{ஈ ஆர்} = \frac{\text{அரசிறையின் சதவீத மாற்றம்}}{\text{சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாற்றம்}}$$

$$\text{ஈ ரி} = \frac{\text{வரி அரசிறையின் சதவீத மாற்றம்}}{\text{சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீத மாற்றம்}}$$

துக்காட்டின. மூல இலக்குகளைவிட அரசிறைச் சேகரிப்புக்கள் கடந்த பத்து ஆண்டுகளிலும் கூடுதலாக இருந்தமைக்கு முரணாக, இவ்வாண்டில் சேகரிக்கப்பட்ட அரசிறை மூல மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 8 சதவீதக் குறைவினைக் காட்டியது. 1982இன் சிறப்பற்ற இறைச் செயலாற்றத்திற்கு உலகப் பொருளாதாரம் மிகவும் மந்தமாக விளங்கும் ஒரு ஆண்டில் வர்த்தக ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்ப அமையும் பன்னாட்டு வர்த்தக அடிப்படையிலான வரிகளை அளவுக்கு அதிகமாக மதிப்பிட்டமை ஓரளவு காரணமாகும்.

வரி அரசிறை, வரியல்லாத அரசிறை என்பவற்றின் சார்பு ரீதியான பங்குகள் மாற்றமுறாது நிலையாக விளங்கியபோதிலும் வரி அரசிறையின் அமைப்பில் கணிசமான மாற்றங்களைக் காணக்கூடியதாக உள்ளது. நேரில் வரிகள் வரி அரசிறையில் முக்கிய பங்கினை வகித்தபோதிலும் அதன் வளர்ச்சி வீதம் மிகவும் சிறிதாகவே விளங்கியது. இது சார்பு ரீதியிலான பங்கில் 1981 இன் 75 சதவீதத்திலிருந்து 1982இல் 70சதவீத வீழ்ச்சியினைக் காட்டியது. நேரில் வரிகளில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சி ஏற்றுமதித் தீர்வைகளிலிருந்து கிடைத்த சேகரிப்புக்கள் கணிசமான வீழ்ச்சி அடைந்தமையால் ஏற்பட்டதாகும். ஓரளவிற்கு இதன் விளைவாகவும் உயர்ந்த வளர்ச்சி வீதம் காரணமாகவும் அரசிறையில் நேர்வரிகளின் பங்கு 1981இன் 12 சதவீதத்திலிருந்து 1982இல் 16சதவீதத்திற்கு அதிகரித்தது.

மொத்த விற்பனவுவரியிலிருந்து கிடைத்த சேகரிப்புக்கள் மொத்தஅரசிறையில் 23சதவீதமாக அமைந்து ரூ. 40,510 இலட்சமாக விளங்கி 43 சதவீதங்கொண்ட பெருமளவு அதிகரிப்பினைக்காட்டியது. இவ்வதிகரிப்பு இறக்குமதிகளை உள்ளடக்கும் வகையில் வரி அடிப்படை விரிவாக்கப்பட்டமை, வரி வீதங்கள் அதிகரித்தமை 1982 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு சில விடுப்புக்கள் உள்ளடக்கப்பட்டமை என்பவற்றால் ஏற்பட்டதாகும். வர்த்தகமும், தொழிலும், தயாரிப்பு, இறக்குமதிகள் என்பனவற்றின் மீதான மொத்த விற்பனை வரிகள் முறையே ரூ. 15.240 இலட்சமாகவும், ரூ. 18,050 இலட்சமாகவும், ரூ. 7,220இலட்சமாகவும் விளங்கின.

ஏற்றுமதித் தீர்வைகள் 1982 இல் ரூ. 24,840 இலட்சமாக அமைந்து 1981உடன் ஒப்பிடுகையில் 33 சதவீதங்கொண்ட பெருமளவு வீழ்ச்சியினைக் காட்டின. இவ்வாறு மொத்த அரசிறையில் ஏற்றுமதித் தீர்வைகளின் பங்கு 1981 இல் 23 சதவீதத்திலிருந்து 1982இல் 14 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது ஓரளவிற்கு 1982 வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு ஓரளவு உற்பத்தியாளார் இலாப எல்லையினை வழங்குவதற்காகத் தீர்வையினைக் குறைத்ததன் விளைவாகத் தேயிலையின் ஏற்றுமதித் தீர்வையிலிருந்து கிடைத்த சேகரிப்புக்கள் 26 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையால் ஏற்பட்டதாகும். இறப்பர் மீதான ஏற்றுமதித் தீர்வை 1981இல் 3 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பிற்கு முரணாக 47 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டில் பெறப்பட்ட கூறவிலைகள் குறைவாக இருந்தமையே காரணமாகும். தெங்குப் பொருட்களிலும் ஏற்றுமதி அளவுஅதி

ரித்த போதிலும் குறைவான கஜபெ விலைகள் 21 சதவீத வீழ்ச்சியினை ஏற்படுத்தின- சிறுவேளாண்மைப் பயிர்கள் மீதான ஏற்றுமதித் தீர்வை 38 சதவீதம் கொண்ட கூடியளவு வீழ்ச்சியினைக் காட்டியது. இது முக்கியமாக 1981 நடுப்பகுதியில் மெத்தைத்தும்பின் மீதும், 1982 நடுப்பகுதியில் சிலிர்ப்பு முறுக்கப்பட்ட தும்பினதும் ஏற்றுமதித் தீர்வைகள் இடைநிறுத்தப்பட்டமையாலும் மெக்சிக்கோ நெருக்கடி காரணமாக கறுவாப்பொருட்கள் மீதான தீர்வைச் சேகரிப்புக்கள் வீழ்ச்சியடைந்தமையினாலும் ஏற்பட்டதாகும்.

1982 இல் இறக்குமதித் தீர்வைச் சேகரிப்புக்கள் ரூ. 30 இலட்சத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்த போதிலும் மொத்த அரசிறையில் இறக்குமதித் தீர்வையின் பங்கு 20 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டுகளைப் போன்ற தீர்வை வீழ்ச்சியின் சராசரி வீதம் மாற்றமின்றி 9 சதவீதமாக விளங்கியது. எனினும் 1982ல் அரிசி, கோதுமைத்தானியமும் மாவும், பெற்றோலியம், வளமாக்கி என்பன நீங்கலாக இது 14 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

தேர்ந்த விற்பனவுகள் வரிகள் ரூ. 22,730 இலட்சமாக அமைந்து சென்ற ஆண்டின் 8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 12 சதவீத அதிகரிப்பைக்காட்டியது. எனினும், மொத்த அரசிறையில் இதன் சார்புரீதியான பங்கு 13 சதவீதமாக மாற்றமின்றி விளங்கியது. முந்திய ஆண்டுகளில் விளங்கியதைப்போன்று புகையிலை வரி முக்கிய கூறாக விளங்கி சென்ற ஆண்டின் 12 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 17 சதவீதத்தினால் அதிகரித்தது. இது தொகையில் ஏற்பட்ட சிறிதளவு அதிகரிப்பினாலும் வரி வீதங்கள் அதிகரித்தமையினாலும் ஏற்பட்டதாகும். மதுவகை மீதான கலால்வரி ரூ. 8,080இலட்சமாக அமைந்து 8 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. தேயிலை (பெறுமான விகித) வரி 1982 இல் 73 சதவீதத்தினால் அதிகரித்து ஆண்டின் பிற்பகுதியின்போது ஏல விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தது.

நேர்வரிகள் முந்திய ஆண்டில் ஏற்பட்ட 2 சதவீத வீழ்ச்சிக்கு முரணாக 43 சதவீதத்தினால் கணிசமான அளவு அதிகரித்தன. கூட்டுவரிகளின் சேகரிப்புகள் பெரும்பாலும் தயாரிப்பு, போக்குவரத்துத் துறைகளிலிருந்து கிடைத்த உயர்ந்தளவான அரசிறை மொத்தத்தின் காரணமாக 45 சதவீதத்தினால் அதிகரித்தன. 1981 மார்ச்சில் மொத்த கழிவு வசதி நீக்கப்பட்டமையும் இவ் அதிகரிப்பிற்கு உதவியிருக்கலாம். கூட்டல்லா வருமான வரிகள் 41 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு முந்திய ஆண்டின் நிலுவைகளையும் உள்ளடக்கிய தனியார் வருமான வரிகளின் உயர்ந்தளவான சேகரிப்புக்கள் காரணமாகும். 1981 இனைப்போன்று வருமானவரிகள் மொத்த நேர்வரிகளில் 98 சதவீதத்திற்கு வகைகூறின.

வரியல்லா அரசிறையில் முக்கிய விடயமாக விளங்கியது வர்த்தக முயற்சிகளிலிருந்து கிடைத்த மொத்த வரவுகளாகும். இது ரூ. 12,470 இலட்சமாக அமைந்து 10 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. ஏனைய மூலங்களிலிருந்து கிடைத்த வரவுகள் முக்கியமாக விற்பனவுகளும், கட்டணங்களும் வட்டியும் இலாபங்களும்,

பங்கிலாபம் என்பவற்றிலிருந்து கிடைத்த உயர்ந்த வரவுகள் காரணமாக 26 சத வீதத்தினுல் அதிகரித்தன. விற்பனைகளும் கட்டணங்களும் 72 சதவீதத்தினுல் அதிகரித்து 1981 இன் பிற்பகுதியில் அறிவிக்கப்பட்ட அறவீடுகள், கட்டணங்களின் அதிகரிப்பைப் பிரதிபலித்தன. கூட்டுத்தாபனங்களுக்கான வரவுசெலவுத் திட்ட உதவுத்தொகைகள் அதிகரித்தமையினுல் வட்டிவரவுகள் 47 சதவீதத்தினுலும் இலாபங்களும் பங்கிலாபங்களும் 76 சதவீதத்தினுலும் அதிகரித்தன.

**மீண்டெழும் செலவு**

முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் நீங்கலான மொத்த மீண்டெழும் செலவு ரூ. 201,130 இலட்சமாகஅமைந்து 23 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. எனவே மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புபடுத்தி நோக்குகையில் மீண்டெழும் செலவு 1981இன் 19 சதவீதத்திலிருந்து 1982 இல் 20 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும் மொத்தச் செலவில் மீண்டெழும் செலவின் பங்கும் 51 சத வீதத்திலிருந்து 53 சத வீதத்திற்கு அதிகரித்தது.

செலவில் ஏற்பட்ட பெருமளவான அதிகரிப்பு பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள், தனியார் ஊதியங்கள், ஓய்வூதியங்கள் என்பவற்ருல் ஏற்பட்டுள்ளளது. இவற்றிலான இணைந்த செலவு 115,550 இலட்சமாக அமைந்து 1981 இன் 33 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 31 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இவ்வாறு மொத்த மீண்டெழும் செலவில் இவ்விடயங்களின் பங்கு 1981 இன் 55 சத வீதத்திலிருந்து 57 சத வீதத்திற்கு அதிகரித்தது. உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டியில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்கள் காரணமாக வட்டிக் கொடுப்பனவுகள் 33 சத வீதத்தினுல் அதிகரித்து ரூ. 51,160 இலட்சமாக விளங்கின. உள்நாட்டுப் படுகடன் மீதான மொத்த வட்டிக் கடப்பாடுகள் ரூ. 42,010 இலட்சமாக அமைந்து 34 சத வீத அதிகரிப்பைக் காட்டியது. ரூபாக்கடன் கள் மீதான வட்டி 28 சத வீதத்தினுல் அதிகரித்து ரூ. 21,670 இலட்சமாக விளங் கிய வேளையில் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி 53 சத வீதத்தினுல் ரூ. 20,100 இலட்சத்திற்கு அதிகரித்து வெளிநின்ற பொதுப்படுகடனின் அதிகரித்த அளவினைப் பிரதிபலித்தது. 1982 சனவரி தொடக்கம் சம்பளங்கள் சீராக்கம் செய் யப்பட்டமையினுலும் வாழ்க்கைச் செலவு மாறுபாடுகளின் செலவுக் கொடுப்பனவு களாலும் இவ்வாண்டின் தனியாளின் ஊதியங்கள் 18 சத வீதத்தினுல் அதிரித்து ரூ. 48,020 இலட்சமாக விளங்கின. வாழ்க்கைச் செலவுப்படிக் கொடுப்பனவினு லும் ஒன்று திரட்டப்பட்ட ஓய்வூதியத்தினுலும் ஓய்வூதியம் மீதான செலவு 81 சத வீதத்தினுல் பெருமளவு அதிகரித்து ரூ. 16,370 இலட்சமாக விளங்கியது.

இவ்வாண்டில் முக்கிய உதவுதொகைகள் மீதான மாற்றல் கொடுப்பனவுகள் 1981 இன் ரூ. 34,420 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 34,100 இலட்சமாக அமைந்தன. உணவு, மண்ணெண்ணெய், முத்திரைகள் மீதான செலவு முறையே ரூ. 14,750 இலட்சமாகவும் ரூ. 1,710 இலட்சமாகவும் விளங்கின. குழந்தைகளுக் கான பாலுணவு மீதான உதவு தொகை ரூ. 930 இலட்சமாக அமைந்த வேளையில்

பால் சபைக்கான உற்பத்தியாளர் உதவு தொகை ரூ. 460 இலட்சமாகவும் அமைந்தது. தேயிலைக் கொழுந்திற்கான விலை உதவித்திட்டம் மீதான செலவு ரூ. 240 இலட்சமாக விளங்கியது. தேசிய சேமிப்பு வங்கிக்கான வட்டி உதவு தொகை 1981 இன் 3,880 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 4,010 இலட்சமாக விளங்கின. வேளாண்மைத் துறைக்கான வளமாக்கி உதவு தொகை ரூ. 9,290 இலட்சமாக அமைந்தது. இது வளமாக்கிக் கூட்டுத்தாபனத்தினூடாக வழங்கப்பட்ட ரூ.2 810 இலட்சத்தினையும் அரச வளமாக்கித் தயாரிப்புக் கூட்டுத்தாபனத்தினூடாக வழங்கப்பட்ட ரூ. 5,430 இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தது. இறக்குமதித் தீர்வை மீளளிப்புத் திட்டத்தின் கீழான செலவு 1981 இன் ரூ. 5.000 இலட்சத்திலிருந்து 1982 இல் ரூ. 7,130 இலட்சத்திற்கு அதிகரித்தது. குறைவான கஏபெ விலைகள் தொடர்பாக தேங்காய் எண்ணெய், தேய்காய்த் துருவல் என்பன மீதான விலை உதவித் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்காகத் தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபைக்கு ரூ. 300 இலட்சம் வழங்கப்பட்டது.

நடைமுறை மாற்றல்களில் அரச கூட்டுத்தாபனங்களது நட்டங்களுக்கான மீள நிரம்பல்கள் 1982 இல் கணிசமான அளவு குறைவாக அமைந்து 1981 இன் ரூ. 1.070 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 240 இலட்சமாக விளங்கியது. முக்கியமாக உதவி பெற்றவை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (ரூ. 120 இலட்சம்) தேசிய வேளாண்மை பன்முகப்படுத்தல் குடியேற்ற மேலாண்மைச் சபை (ரூ. 50 இலட்சம்) என்பனவாகும். கூட்டுத்தாபனங்களுக்கான ஏனைய மாற்றல்கள் நீர்வழங்கல் வடிகால் சபைக்கான ரூ. 1,840 இலட்சத்தையும் இலங்கை மின் சபைக்கான ரூ. 1,370 இலட்சத்தையும் பெரும்பாலும் மாணவர்களுக்கான உதவுதொகை வழங்கப்பட்ட பருவகால சீட்டுக்கள் காரணமாக இமபோவ சபைக்கான ரூ. 1,300 இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தன. அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கும் தனித்தனி ரூ. 500 இலட்சம் வழங்கப்பட்டது. ஏனைய அரச நிறுவனங்களுக்கான மாற்றல்கள் உள்ளூராட்சி சபைக்கான ரூ. 2,710 இலட்சத்தையும் பல்கலைக் கழக நன்கொடைகள் ஆணைக்குழுவிற்கான ரூ. 1,460 இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தன.

மதிப்பிடப்பட்ட செலவான ரூ. 213,770 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் உண்மையான செலவு ரூ. 201,130 இலட்சமாக அமைந்து ரூ. 12,640இலட்சம் அல்லது 6 சத வீதம் கொண்ட குறைப் பயன்பாட்டினை ஏற்படுத்தியது. கணிசமான அளவு சேமிப்புக்களைப் பதிவுசெய்த விடயங்கள் வட்டிக் கொடுப்பனவுகள் (ரூ. 4960 இலட்சம்) வளமாக்கி உதவுதொகை (ரூ. 700 இலட்சம்) தேசிய சேமிப்பு வங்கிக்கான வட்டி உதவு தொகை (490 இலட்சம்), தேயிலைக் கொழுந்திற்கான விலை மீள் உதவித்திட்டம் (ரூ. 400 இலட்சம்) கூட்டுத்தாபனங்களின் நட்டங்களுக்கான நிரப்பல்கள் (ரூ. 750 இலட்சம்) என்பனவாகும்.

முற்பணக் கணக்குகள்

கடந்த அண்மை ஆண்டுகளில் மிகப்பெரும் வெளிக்கொடுப்பனவுகளைக் கொண்டிருந்த முற்பணக் கணக்குக் கொடுப்பனவுகளுக்கு மிகவும் முரணான வகையில் 1982 இல் இவை ரூ. 8,830 இலட்சங்கொண்ட தேறிய உள் வரவைக் கொண்டிருந்தன. இதுவரை காலமும் வரவு செலவுத்திட்டத்தின் நிலையற்ற தன்மைக்கு முக்கிய கூறாக அமைந்த இத்தொழிற்பாடுகள் 1982 இல் வரவு செலவுத்திட்ட நிதியின் தேறிய பாவனையாளராக இல்லாது வரவு செலவுத்திட்ட மூலத்திற்கு உதவுநராக அமைந்தது. உணவு ஆணையாளரின் கையிருப்பினை ரூ. 10,000 இலட்சத்தினால் குறைத்துக்கொண்டமையால் அரச திணைக்களங்களுக்கான தேறிய முற்பணங்கள் தொடர்பான உள்வரவுகள் கணிசமான அளவு குறைக்கப்பட்டமையினாலேயே இம்மாற்றம் ஏற்பட்டது. இதன் விளைவாக உணவு ஆணையாளருக்கான வெளிநின்ற மொத்த முற்பணங்கள் கணிசமானளவு வீழ்ச்சியடைந்து 1982 இல் ரூ. 9,600 இலட்சங்கொண்ட உள்வரவினைக்காட்டின. ஏனைய எல்லா அரச திணைக்களுங்களுக்கான முற்பணங்கள் மீதான முழுமையான வெளிக்கொடுப்பனவுகள் ரூ. 1,390 இலட்சமாக அமைந்து அரச திணைக்களங்களின் முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளிலிருந்து ரூ. 8,210 இலட்சங்கொண்ட தேறிய உள்வரவினை வழங்கின. களஞ்சியங்கள் பொருட்களுக்கான முற்பணங்களைப் பொறுத்தவரை முழுமையான நிலை சமமான தாக்கங்களைக்காட்டியது. எனினும் இக்கணக்குகளினுள்ளே ஒன்றையொன்றை ஈடுசெய்யும் வெளிக்கொடுப்பனவுகளும் உள்வரவுகளும் அமைத்திருந்தன. மிகை நிலுவைகள், முற்பணக்கணக்குகள் என்பவற்றிலிருந்து பெற்ற கடன்கள் ரூ. 810 இலட்சங்கொண்ட வெளிக்கொடுப்பனவுகளைக் காட்டின. இவை முக்கியமாக தேசிய நீர்வழங்கல் வடிகால்சபை (ரூ.720 இலட்சம்) தேசிய புடவைக்கூட்டுத்தாபனம் (ரூ. 300 இலட்சம்), தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (ரூ. 250 இலட்சம்), என்பவற்றுக்கான முற்பணங்களைக் கொண்டிருந்தன. இவை நெல் சந்தைப்படுத்தல் சபை (ரூ. 290 இலட்சம்) புடவைக் கைத்தொழில் பணிப்பாளர் (ரூ. 150 இலட்சம்) தேசிய புடவை நிறுவனம் (ரூ. 150 இலட்சம்) என்பவற்றிலிருந்து கிடைத்த உள்வரவுகளினால் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டிருந்தன. இலங்கை / சீனா வர்த்தகக் கணக்கு ரூ. 4,180 இலட்சங்கொண்ட உள்வரவினைப் பதிவு செய்தது. இது 1981 முடிவிலிருந்து கணக்கினூடான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டமையின் விளைவாக முற்பணங்களில் ஒரு பகுதி செலுத்தப்பட்டமையினால் ஏற்பட்டதாகும். பல்வகை முற்பணக் கணக்குகளுடன் தொடர்புடைய தேறிய முற்பணங்கள் ரூ. 2,790 இலட்சமாக அமைந்தன.

மூலதனச் செலவு

1982 இல் கடன்கரைப்பு நிதிய உதவு தொகைகளையும் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய மூலதனச் செலவு ரூ. 188,670 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட பேரளவு ரீதியில் 41 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பினைக் காட்டியது. முரணாக 1981 இல் இது 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. எனவே மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான மொத்த

மூலதனச் செலவு 1981 இன் 16 சதவீதத்திலிருந்து 19 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. கடன்கரைப்பு நிதிய உதவு தொகைகளும் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும் நீங்கலான மூலதனச் செலவு ரூ. 162,550 இலட்சமாக விளங்கியது. மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கியை உபயோகித்து பணவீக்க நிலைக்கேற்ப சீராக்கம் செய்யுமிடத்து 1970 விலைகளிலான மூலதனச் செலவு 1981 இன் ரூ.30,700 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1982 இல் ரூ. 38,220இலட்சமாக அமைந்து, ஒன்று திரட்டிய நிதியத்திலிருந்து நிதியிடப்படும் மூலதனச் செலவிற்கான பண ஒதுக்கு 10 சதவீதத்தால் நிருவாக ரீதியில் குறைக்கப்பட்டபோதிலும் 24 சதவீத அதிகரிப்பைக்காட்டியது. 1981 தொடக்கம் அரசு நடைமுறையிலிருக்கும் மூலதனச் செலவுச் செயற்றிட்டங்களை மட்டும் கொண்டு நடத்துவதெனத் திட்டமிட்டு முயற்சிக்கும் வகையில் மூலவளக்கட்டுப்பாடுகள் அமைந்திருந்தமையினைக் கருத்திற்கொண்டு நோக்குகையில் பேரளவிலும் உண்மையான ரீதியிலுமான நியதிகள் மூலதனச் செலவு அதிகரிப்பு இன்னும் 1981 இல் அடையப்பட்ட தினைவிட அதிகரித்த மூலதனச் செலவினையே பிரதிபலிக்கின்றது.

கடன்கரைப்பு நிதிய உதவுதொகைகள், கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் என்பன நீங்கலான உண்மையான மூலதனச் செலவினை மொத்த மதிப்பிடப்பட்ட செலவுடன் ஒத்துநோக்குகையில் ரூ. 20,180 இலட்சம் அல்லது 11 சதவீதம் கொண்ட குறைச் செலவினைக் காட்டியது. எனினும் மொத்த மூலதனச் செலவு எதிர்வரும் நிதியாண்டில் பயன்படுத்துவதற்கெனத் திறைசேரி வைப்புக்களுக்கு மாற்றல் செய்யப்பட்ட ரூ. 18,360 இலட்சத்தினையும் உள்ளடக்குகிறது. இத்தகைய மாற்றல்களுக்கு ஏற்ப மூலதனச் செலவினைச் சீராக்கம் செய்யுமிடத்து குறைச்செலவு ரூ. 38,540 இலட்சமாக அமைந்து 21 சதவீதங்கொண்ட குறைச் செலவு மட்டத்தினைக் காட்டியது. அமைச்சுகளின் படியான மூலதனச் செலவின் பகுப்பாய்வு புள்ளிவிபரப்பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

தற்காலிகத்தரவுகளின்படி துரிதப்படுத்தப்பட்ட மகாவலிச் செயற்றிட்டம் மீதான செலவு ரூ. 72,170[1] இலட்சங்கொண்ட வரவு செலவுத்திட்ட ஒதுக்கிற்கு எதிராக ரூ. 71,400 இலட்சமாக விளங்கியது. எனினும் திறைசேரி வைப்புக்களுக்கான மாற்றல்களுக்கும் 1981 இல் ஒதுக்கப்பட்ட நிதியங்களின் பாவனைக்கும் ஏற்ப செலவினைச் சீராக்கம் செய்யுமிடத்து உண்மையான செலவு ரூ. 55,260 இலட்சமாக விளங்கியது. ஒப்பிடுகையில் முந்திய ஆண்டின் மூலதனச் செலவு ரூ. 36,360 இலட்சமாகும்.

உள்ளூராட்சி, வீடமைப்பு, கட்டடவாக்க அமைச்சின் வீடமைப்புச் செயற்றிட்டம் ரூ. 7,030 இலட்சமாக அமைந்து அமைச்சின் மொத்த மூலதன வாக்கில் 31 சதவீதமாக விளங்கியது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் இத்திட்டம் மீதான செலவு ஏனைய மூலங்களிலிருந்து பெறப்பட்ட மூலவளங்

[1] அறிக்கையின் அட்டவணை 1.27 இல் காட்டப்பட்ட வரவுசெலவுத்திட்ட செலவு 10 சதவீத செலவுக்குறைப்பிற்கு ஏற்ப சீராக்கம் செய்யப்பட்டிருப்பதனால் இது வேறுபடுகின்றது.

களுடன் ரூ. 8,890 இலட்சமாக விளங்கியது. நகர வீடமைப்புத்திட்டத்தின் மீதான செலவு ரூ. 6,740 இலட்சமாகும். உதவி வழங்கப்பட்டுத் தாமாக அமைக்கும் வீடமைப்புத்திட்டமும் (மாதிரிக்கிராமங்களும் உள்ளமைப்பு வசதிகளும் உட்பட) தேர்தல் தொகுதிவாரியான வீடமைப்புத் திட்டமும் ரூ 1.890 இலட்சங்கொண்ட நிதிச்செலவினைக் கொண்டிருந்தன. அரச ஊழியர்களின் குடியிருப்புக்களை அமைப்பதற்கும் சேரிகளைத் திருத்தியமைப்பதற்குமான செலவு முறையே ரூ. 200 இலட்சமாகவும் ரூ. 60 இலட்சமாகவும் விளங்கின. காணிகளின் கொள்வனவு, திருத்தங்கள் மீது ரூ. 400 இலட்சங்கொண்ட தொகை செலவிடப்பட்டது.

1982 இல் சயவர்த்தனபுர நாடாளுமன்ற, நிருவாக அமைப்பின் மீது முக்கியமான அமைச்சுகளினால் ரூ. 3,710 இலட்சம் செலவிடப்பட்டது. கட்டடத் திணைக்களம் கட்டடவாக்க நடவடிக்கைகள் மீது ரூ. 2,400 இலட்சத்தினைச் செலவிட்டது. கொழும்பு மாவட்ட (தாழ்பிரதேச) நிலமீட்சி அபிவிருத்திச்சபையினால் ரூ. 450 இலட்சம் செலவிடப்பட்டது. இலங்கை மின்சபையும் தொலைத்தொடர்புத் திணைக்களமும் இவ் அமைப்பு தொடர்பாக தனித்தனி ரூ. 430 இலட்சத்தினைச் செலவிட்டன.

கொழும்புப் பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் (கொ பெ பொ ஆ) நடவடிக்கைகள் மீதான மொத்தச் செலவு 1982 இல் ரூ. 930 இலட்சமாக அமைந்தது. இதில் ரூ. 600 இலட்சம் மூதலீட்டு ஊக்குவிப்பு பிரதேசங்களில் செலவிடுவதற்கென கொ பெ பொ ஆ இற்கு வழங்கப்பட்டது. இலங்கை மின்சபை ரூ. 270 இலட்சத்தினையும் தொலைதொடர்புத் திணைக்களம் ரூ. 60 இலட்சத்தையும் செலவிட்டன.

1982 இல் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழான ஒதுக்கு முந்திய ஆண்டினைப்போன்று ரூ. 4,200 இலட்சமாக விளங்கியது. ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித்திட்டதித்தின் மீதான செலவு ரூ. 2,460 இலட்சமாக விளங்கியது. இத்திட்டத்தின் கீழான நடவடிக்கைகளில் முக்கிய விடயங்களாக வேளாண்மையும் நீர்ப்பாசனமும் (ரூ. 1,290 இலட்சம்) தொலைத்தொடர்புகள் (ரூ, 360 இலட்சம்), நலத்துறை (ரூ. 240 இலட்சம்). கல்வி ரூ. 120 இலட்சம் என்பன விளங்கின.

முதலீட்டினை நோக்கமாகக் கொண்ட கடன்கள் இவ்வாண்டில் ரூ. 7,770 இலட்சமாக விளங்கின. இதில் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை ரூ. 3,770 இலட்சத்தினைப் பெற்றது. ஏனைய பெறுநர்கள் இலங்கை மின்சபை (ரூ. 2,250 இலட்சம்), வரையறுக்கப்பட்ட (இலங்கை) கலதாரி கொட்டல் (ரூ. 1,250 இலட்சம்), தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலான்மைச் சபை (ரூ. 410 இலட்சம்) உள்நாட்டுக் கடன்களும் அபிவிருத்தி நிதியமும் (ரூ. 90 இலட்சம்) என்பனவாகும்.

**வரவு செலவுத்திட்டப் பற்ருக்குறையை நிதியிடல்**

1982 இன் இறைத்தொழிற்பாடுகள் ரூ. 202,890 இலட்சங்கொண்ட வரவுசெலவுத் திட்டக்குறையை ஏற்படுத்தி முந்திய ஆண்டினைவிட கூடியளவான 36 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. மொத்த அரச செலவினத்துடன் தொடர்பு படுத்தி நோக்குகையில் வரவுசெலவுத்திட்டபற்ருக்குறை 47சதவீதத்திலிருந்து 53சத வீதத்திற்கு அதிகரித்தது. முற் பணக்கணக்குத் தொழிற்பாடுகள் மறுபுறமாக அமைந்திராவிடின் வரவுசெலவு திட்டநிலை மேலும் மோசமடைந்து முதலீட்டுக் குக் கிடைக்கத்தக்கதாகவிருந்த மூலவளங்களை நடைமுறை நுகர்வுச் செலவிற்கு மாற்றவேண்டியிருந்திருக்கும்.

மதிப்பிடப்பட்ட மூல வரவுசெலவுத்திட்ட பற்ருக்குறையில் ஏறத்தாழ 67 சதவீதத்திற்கு நிதியிடப்பட்ட வெளிநாட்டு மூலவளங்களுக்கு மாருக 1982இன் வெளிநாட்டு மூலவளங்கள் ரூ. 92,700 இலட்சமாக அமைந்து குறையில் 46 சத வீதத்தினை நிதியிட்டன. இது 1981 இன் 55 சதவீதம் கொண்ட உண்மையான நிதியிடலுடன் ஒப்பிடத்தக்கது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவிருந்த மொத்த வெளிநாட்டு நிதி 1981இன் 9.7 சதவீதத்திலிருந்து 1982இல் 9.2 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. செயற்றிட்ட, பண்ட, ஏனைய கடன்கள் மூலமான வெளிநாட்டு நிதி ரூ. 57,010 இலட்சமாக அமைந்தவேளையில் நன்கொடைகள் ரூ. 35,690 இலட்சமாக விளங்கின. மொத்த வெளிநாட்டு நிதியில் நன்கொடை களின் பங்கு 1981இன் 33 சதவீதத்திலிருந்து 1982இல் 38 சதவீதத்திற்கு அதி கரித்தது. செயற்றிட்டக் கடன்கள் ரூ. 32,560 இலட்சமாகவும் பண்ட, ஏனைய கடன்கள் முறையே ரூ. 13,550 இலட்சமாகவும், ரூ. 10,900 இலட்சமாகவும் அமைந் தன. ஏனைய கடன்கள் யூரோ நாணய வர்த்தகக் கடனிலிருந்து பெறப்பட்ட ஒரு பகுதியான ரூ. 8,360 இலட்சத்தினையும் யப்பானிய யென் முறிகளிலிருந்து பெற்ற பெறுகைகளிலிருந்து பயன்படுத்தப்பட்ட ரூ. 2,540 இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தன.

பற்ருக்குறையை நிதியிடுவதில் உள்நாட்டு மூலவளங்களின் பங்கு 1981இன் 45 சதவீதத்திலிருந்து 1982இல் 54 சதவீதத்திற்கு அதிகரித்தது. இது தொடர் பான வங்கியல்லா உள்நாட்டுத்துறையின் செயலாற்றம் எதிர்பார்த்ததனைவிடச் சிறந்ததாக இருந்தது. 1982இன் வரவு செலவுத்திட்ட மதிப்பீடான ரூ. 40,000 இலட்சத்துடனும் 1981இன் ரூ. 23,790 இலட்சங்கொண்ட உதவுதொகையுடனும் ஒப்பிடுகையில் வங்கியல்லா உள்நாட்டுத்துறை பற்ருக்குறையை நிதியிடுவதற்கு ரூ. 58,940 இலட்சத்தினைக் கிடைக்கச் செய்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி யுடன் தொடர்புபடுத்தி நோக்குகையில் இத்துறையிலிருந்து கிடைக்கக்கூடியதாக இருந்த மொத்த மூலவளங்கள் 1980 இனதும் 1981 இனதும் முறையே 4.1 சத வீதத்துடனும் 2.8 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 5.9 சதவீதமாக விளங்கியது. வர்த்தக வங்கிகளுடனுன நிலையான வைப்புக்கள் மீது வட்டி வீதங்கள் குறைக்கப் பட்டமையினைத் தொடர்ந்து தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்புக்கள் கணிசமாக

UNIVERSITY OF MORATUWA LIBRARY

அதிகரித்தமையினாலும், ஏனைய நிருவகிக்கப்பட்ட மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்க தாகவிருந்த அதிகரித்த மூலவளங்கள் காரணமாகவுமே இத்துறையில் முன்னேற்ற மான செயலாற்றம் காணப்பட்டது. வங்கியல்லாத்துறை அனைத்து ரூபாப் பிணை களுக்கு ரூ. 58,930 இலட்சங்களை உதவியதுடன் வரவு செலவுத்திட்டப் பற்றுக் குறை நிதியிடலில் ஏறத்தாள முழுவதற்கும் இத்துறை வகை கூறியது.

சந்தையல்லா மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்கதாயிருந்த மொத்த நிதி 1981இன் ரூ. 4,000 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 13,540 இலட்சமாக விளங் கியது. வரவு செலவுத்திட்டக்குறையின் முழுமையான நிதியிடலில் இதன் பங்கு 7சதவீதமாக அமைந்த வேளையில் பற்றுக்குறையின் உள்நாட்டு நிதியிடலில் இதன் பங்கு 12 சதவீதமளவாக விளங்கியது. வைப்புக்களுக்கான செலவு ஒதுக்குகளின் மாற் றல்கள் தொடர்பான நடவடிக்கைகளிலிருந்து எழும் பல்வேறு வகையான வைப் புக்களை உள்ளடக்கிய பெரும்பாலும் எல்லாக் கடன்பாடுகளும் நிருவாகக் கடன் பாடுகளில் ஏற்பட்ட ஓரளவு வீழ்ச்சியினால் ஈடு செய்யப்பட்டன. செலவினை மாற் றல் செய்யும் நடவடிக்கைகளிலிருந்து எழும் வைப்புக்கள் ரூ. 15,620 இலட்சமாக அமைந்த வேளையில் நிருவாகக் கடன்பாடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ரூ. 1,490 இலட்ச மாக விளங்கியது. ஏனைய எல்லா வைப்புக்களும் ரூ. 600 இலட்சங் கொண்ட தேறிய வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

இறைப்பற்றுக்குறையினை நிதியிடுவதில் வங்கித்துறை 1981 இன் ரூ. 39,170 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1982இல் ரூ. 40,060 இலட்சத்தினை வழங்கியது. எனினும் வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறையில் வங்கியின் நிதியிடலின் பங்கு 1981இன் 26 சதவீதத்திலிருந்து 1982 இல் 20 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் இது 4.6 சதவீதத் திலிருந்து 4.0 சதவீத வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. வங்கித் துறையில் உதவு தொகைகள் திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு (ரூ. 32,950 இலட்சம்), மத் திய வங்கித் தற்காலிக முற்பணங்கள் (ரூ. 6,040 இலட்சம்), ரூபாப்பிணைகளுக்கான உதவுதொகைகள் (ரூ. 1,070 இலட்சம்) என்பவற்றை உள்ளடக்கியிருந்தன பற்றுக்குறையில் மத்திய வங்கியின் நிதியிடல் ரூ. 33,490 இலட்சமாக அமைந்து திறைசேரி உண்டியல்களின் உடமையில் ரூ. 27,450 இலட்ச அதிகரிப்பினையும், மத் திய வங்கி முற்பணங்களில் ரூ. 6,040 இலட்ச அதிகரிப்பினையும் கொண்டிருந்தது. வர்த்தக வங்கிகள் பற்றுக்குறையினை நிதியிடுவதற்கு ரூ. 6.570 இலட்சத்தினை வழங் கின. இத்தொகை திறைசேரி உண்டியல்களின் உடமையில் ரூ. 5.500 இலட்ச அதிகரிப்பினையும் ரூபாக் கடன்களுக்கான உதவு தொகையில் ரூ. 1,070 இலட்சங் கொண்ட அதிகரிப்பினையும் உள்ளடக்கியிருந்தது.

எல்லா மூலங்களிலிருந்தும் பெறப்பட்ட நிதி வரவு செலவுத் திட்டப்பற்றுக் குறையை ரூ. 2,350 இலட்சத்தினால் விஞ்சியது. இது இணைக்கிணை நிதியங்களின் ரூ. 3,570 இலட்சங்கொண்ட அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்ட வேளையில் பண நிலுவைகள் ரூ. 1, 220 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன.

**பொதுப்படுகடன்**

1982 இன் முடிவில் வெளிநின்ற மொத்தப் பொதுப்படுகடன் முந்திய ஆண்டின் முடிவில் காணப்பட்ட ரூ. 649,990 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ.801,730 இலட்சமாக விளங்கியது. எனினும் பொதுப்படுகடனின் வளர்ச்சி வீதம் 23 சத வீதமாக விளங்கி 1981 இன் 26 சத வீதத்திலும்விடக் குறைவாகக் காணப்பட்டது. வெளிநின்ற மொத்த உள்நாட்டுப்படுகடன் 27 சத வீதத்தால் அதிகரித்து ரூ. 455,750 இலட்சமாக விளங்கியவேளையில் வெளிநாட்டுப்படுகடன் 19 சத வீதத்தால் அதிகரித்து ரூ 345,970 இலட்சமாக விளங்கியது. இதன் விளைவாக மொத்தப் பொதுப்படுகடனில் உள்நாட்டுப் படுகடனின் விகிதாசாரம் 1981 இன் 55 சத வீதத்திலிருந்து 1982 இல் 57 சத வீதத்திற்கு அதிகரித்தது. கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலான பொதுப்படுகடன் (அதாவது தேறிய பொதுப்படுகடன்) முந்திய ஆண்டின் ரூ. 586,590 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1982 இல் ரூ. 712,500 இலட்சமாக விளங்கியது.

பொதுப்படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் 1981 இன் ரூ. 37,160 இலட்சத்திற்கெதிராக ரூ. 50, 860 இலட்சமாக விளங்கி 37 சத வீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. ஒப்பிடுகையில் 1981 இல் அதிகரிப்பு வீதம் 69 சத வீதமாக விளங்கியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சத வீதமாக நோக்குகையில் வட்டிக் கொடுப்பனவுகள் 1981 இன் 4.4 சத வீதத்திலிருந்து 1982 இல் 5 சத வீதத்திற்கு அதிகரித்தன. மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (வட்டிகள், கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், கடன்கரைப்பு நிதிய உதவு தொகைகள்) ரூ. 76,980 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினைவிட 45 சத வீத அதிகரிப்பைக்காட்டின.

அட்டவணை 1.45 இல் காட்டப்பட்டவாறு நீண்ட, நடுத்தரகாலப் படுகடன் குறுகிய காலப்படுகடன் வளர்ச்சி வீதங்கள் பெரும்பாலும் ஒரேயளவாக விளங்கியமையால் உள் நாட்டுப் படுகடனில் நீண்ட, நடுத்தரகாலப் படுகடனினதும் குறுகிய காலப் படுகடனினதும் பங்குகள் மாற்றமின்றி முறையே 57 சத வீதமாகவும் 43 சத வீதமாகவும் விளங்கின.

அட்டவணை 1.45

**வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகுப்பு | 1981 | 1982 | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| அ. நடுத்தர நீண்டகாலப்படுகடன் ... | 20,359.8 | 26,104.5 | 28 |
| இதில் | | | |
| ரூபாக்கடன்கள் ... | 20,025.4 | 25,800.4 | 29 |
| நிருவாகக் கடன்பாடுகள் ... | 334.3 | 304.0 | — 9 |
| ஆ. குறுந்தவணைப் படுகடன் ... | 15,467.3 | 19,470.9 | 26 |
| திறைசேரி உண்டியல்கள் .. | 13,920.0 | 17,320.0 | 24 |
| வரிஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 10.9 | 10.6 | — 3 |
| மத்திய வங்கி முற்பணங்கள் ... | 1,536.4 | 2,140.3 | 39 |
| மொத்தம் ... | 35,827.1 | 45,575.4 | 27 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பொதுப்படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

* கடன்கழைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்தப் பொதுப்படுகடன் 1982 எண் தொகைகள் தற்காலிகமானவை.

1982 இல் ரூபாப் பிணைகளிலிருந்து பெறப்பட்ட மொத்த மூலவளங்கள் வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட ரூ. 40,000 இலட்சத்திற்கெதிராக ரூ. 60 000 இலட்சமாக விளங்கின. இதற்கு முரணுக முந்திய மூன்று ஆண்டுகளிலும் வழங்கப்பட்ட மொத்த ரூபாப் பிணைகள் முறையே ரூ. 29,500 இலட்சம் ரூ. 28,020 இலட்சம், ரூ. 25,120 இலட்சமாக விளங்கின. 1982 இல் ரூபாக் கடன்களுக்கான உதவு தொகைகளில் ஏற்பட்ட இருமடங்கிற்கும் மேலான அதிகரிப்பானது முக்கிய உதவுநர்களுடன் முதலிடக்கூடிய மூலவளங்களின் கிடைக்கக்கூடிய தன்மையில் ஏற்பட்ட அதிகரிப்பினுல் ஏற்பட்டது. கடந்த காலத்தைப் போன்று 1982 இல் ரூபாக் கடன்களுக்கான முக்கிய உதவுநர்களாகத் தேசிய சேமிப்பு வங்கி (தேசேவ), கடன் கரைப்பு நிதியங்கள், ஊழியர் சேமநிதியம் (ஊசேநி) என்பன முறையே ரூ. 23,570 இலட்சம், ரூ. 20,640 இலட்சம், ரூ. 14,160 இலட்சத்தினை வழங்கின.

ரூபாக் கடன்களுக்குத் தேசிய சேமிப்பு வங்கி உதவிய ரூ. 23,570 இலட்சமானது 1981 இன் உதவு தொகைகளைவிட 8 மடங்கிற்கு மேலான அதிகரிப்பைக் காட்டியது. தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து உயர்ந்த மட்டத்திலான உதவு தொகை கிடைத்தமைக்கு முக்கியமாக 1982 இன் நடுப்பகுதியில் வர்த்தக வங்கிகள் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வீதத்தினை குறைத்தமையால் தேசிய சேமிப்பு வங்கியினுல் திரட்டப்பட்ட சேமிப்புக்கள் அதிகரித்தமையே காரணமாகும். முன்னைய ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கியின் வைப்பான ரூ. 4,870 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் இது ரூ.22,150இலட்சமாக விளங்கின. தேசிய சேமிப்பு வங்கியின் அதன் குறுங்காலக் கருவிகளின் மீதான முதலீடுகளில் ஒரு பகுதியினை ரூபாப்பிணைகளுக்கு மாற்றியது.

ரூபாக்கடன்களுக்கான கடன்கரைப்பு நிதிய உதவுதொகைகளைப் பொறுத்தவரை, வரவு செலவுத்திட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளுக்காக அதன் மூலவளங்களில் ஒரு பகுதியினை ஏற்கனவே ஒதுக்கியிருந்தபோதிலும் அது 1981 இனைவிட இருமடங்கு அதிகரிப்பினை பதிவு செய்து ரூ. 20,640 இலட்சமாக விளங்கியது. கடன்கரைப்பு நிதியங்களிலிருந்து கிடைத்த உயர்ந்த மட்டத்திலான முதலீடு கடன்கரைப்பு நிதியத்துக்கு அரசின் உதவுதொகைகள் அதிகரித்தமையினையும் அதன் முதலீடுகளிலிருந்து அதிகரித்த வருமானம் கிடைக்கப்பெற்றமையினையும் பிரதிபலிக்கின்றது. கடன்கரைப்பு நிதியத்திற்கு அரசு ரூ. 18,900 இலட்சத்தினை வழங்கியது. அதே வேளை முதலீட்டிலிருந்து கிடைத்த வருமானம் ரூ. 9,470 இலட்சமாக விளங்கியது. இது முந்திய ஆண்டின் ரூ. 9,640 இலட்சத்துடனும் ரூ. 6,000 இலட்சத்துடனும் ஒப்பிடத்தக்கது. வரவு செலவுத்திட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட கடன் கரைப்பு நிதியங்களின் முதலிடத்தக்க மூலவளங்கள் நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபையின்

## உள்நாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

* கடன்கழைப்பு நிதியங்கள் நீங்கலான மொத்தப் பொதுப்படுகடன். 1982இன் எண் தொகைகள் தற்காலிகமானவை

சிறிதளவால் வீழ்ச்சியடைந்து ரூ. 107 இலட்சமாக விளங்கின. வெளிநின்ற வெளி நாட்டு நிருவாகக்கடன்கள் 1981இன் ரூ. 3,340 இலட்சத்திலிருந்து 1982இல் ரூ. 3,040 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இவ்வாண்டில் கிடைக்கப்பெற்ற நிருவாகக் கடன்களின் மொத்தப் பகிர்ந்தளிப்புகள் ரூ.130 இலட்சமாக அமைந்த வேளையில் மீளக்கொடுப்பனவுகள் ரூ. 490 இலட்சமாக விளங்கின.

1982 முடிவில் வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப்படுகடன் ரூ. 345.970 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் 31 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 19 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. ஏனைய நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி குறைந்தமை வெளிநின்ற தொகையின் அளவினை 1981இன் ரூ. 21,630 இலட்ச அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1982இல் ரூ. 4,400 இலட் சத்தினுல் அதிகரிக்கச் செய்தது. கொடை வழங்குநர்களால் பதிவழிக்கப்பட்ட படுகடன் ரூ. 430 இலட்சமாக அமைந்தது. இதில் ரூ. 340 இலட்சம் செயற்றிட்டக் கடன்களுக்கும் மீதி பண்டக்கடன்களுக்கும் ஆகும். இது 1981இல் பதிவழிக்கப்பட்ட ரூ. 1,470 இலட்சங்கொண்ட தொகையுடன் ஒப்பிடத்தக்கது.

கீழேயுள்ள அட்டவணை 1.46இல் காட்டப்பட்டவாறு செயற்றிட்ட, பண்ட, காசும் ஏனைய கடன்களும் ஆகிய வடிவில் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கடன்கள் முந்திய ஆண்டின் ரூ. 54,870 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 57,010 இலட்சமாக விளங்கின. செயற்றிட்டக்கடன்கள் ரூ. 32,560 இலட்சமாக அமைந்த வேளையில் பண்டக் கடன்களும் காசுக்கடன்களும் முறையே ரூ. 13,550 இலட்ச மாகவும், ரூ. 10,900 இலட்சமாகவும் அமைந்தன. யூரோ நாணயக் கடனையும் உள்ள டக்கிய காசுக்கடன் ரூ, 8,360 இலட்சமாக விளங்கியது. யப்பானிய யென் முறி களை வழங்கியதன் மூலம் ரூ. 2,540 இலட்சம் பெறப்பட்டது. ஐ. அ. நாடுகள் அரசின் உத்தரவாதத்தின்கீழ் ஒன்றிணைக்கப்பட்ட சொலமன் பிறதர்ஸ்டமிருந்து காசுக் கடனுகப் பெறப்பட்ட ரூ. 3,010 இலட்சத்தினையும் செயற்றிட்டக்கடன்கள் உள்ளடக்கும். மீளக் கொடுப்பனவுகளுக்கேற்ப சீராக்கம் செய்யுமிடத்து வெளி நாட்டுக்கடன்பாடுகளின் கீழான தேறிய பகிர்ந்தளிப்புக்கள் முந்திய ஆண்டின் ரூ. 48,800 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 50,270 இலட்சமாக அமைந்தன.

அட்டவணை 1-46

வெளிநாட்டுக் கடன்களின் முக்கிய வழங்குநர்கள் - 1982

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | செயற்றிட்டக் கடன்கள் | பண்டக் கடன்கள் | ஏனைய கடன்கள் |
|---|---|---|---|
| கனடா | 264.7 | — | — |
| பிரான்சு .. | — | 227.5 | — |
| ஐ. அ. நா. ... | 549.5 | 403.2 | — |
| யப்பான் ... | 284.0 | 503.4 | 253.8 |
| யூரோ நாணயம் ... | — | — | 836.4 |
| ஒன்றிணைக்கப்பட்ட சலமோன் பிறதர்ஸ் - நியூயார்க் ... | 301.2 | — | — |
| ஆ. அ. வ. ... | 308.8 | — | — |
| ப. அ. அ. ... | 1,131.8 | — | — |
| ஏனைய .. | 416.2 | 220.7 | — |
| மொத்த வரவுகள் .. | 3,256.2 | 1,354.8 | 1,090.2 |
| மீளக் கொடுப்பனவுக்ள் ... | 203.9 | 401.6 | 68.1 |
| தேறிய வரவுகள் .. | 3,052.3 | 953.2 | 1,022.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

1978ஆம் ஆண்டிலிருந்து ஏனைய கடன்கள் பா. நா. நி. பொறுப்பாண்மை நிதியக் கடனையும் உள்ளடக்கும்.

1982ஆம் ஆண்டுக்கான எண்தொகைகள் தற்காலிகமானவை.

தொகுதிக்கடன்முறிகளுக்கு வழங்கப்பட்ட ரூ. 3,670இலட்சத்தினையும், அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் தொகுதிக்கடன்முறிகளுக்கான ரூ. 500இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தன.

ரூபாக்கடன்களுக்கான ஊழியர்சேமநிதி உதவுதொகை 1981இன் ரூ. 10,220 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1982இல் ரூ. 14,160 இலட்சமாக விளங்கி 38 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது உறுப்பினர்களின் உதவு தொகைகளிலிருந்து கிடைத்த உயர்ந்த வரவுகளாலும் முதலீடுகளிலிருந்து கிடைத்த வருமானத்தினாலும் ஏற்பட்டது. ஏனைய உதவுநர்களிடமிருந்து கிடைத்த மொத்த உதவு தொகைகள் ரூ. 1,630 இலட்சமாக மட்டும் அமைந்தன. இதில் ரூ. 1,070 இலட்சம் வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்டது. 1982இன் அதிகரித்த மட்டத்திலான உதவுதொகைகளினால் ரூ. 40,000 இலட்சங்கொண்ட மூலக்கடன் செயற்றிட்டமானது செத்தெம்பர் 1இல் முற்றாக உதவப்பட்டு மீதித்தொகை ஆண்டின் கடைசி நான்கு மாதங்களிலும் மிதக்கவிடப்பட்டது. இவ்வாண்டின் போது வழங்கப்பட்ட எல்லாப்பிணைகளும் 3 வருட முதிர்ச்சிக் காலத்தையும் ஆண்டுக்கு 16 சதவீத வட்டியையும் கொண்ட நடுத்தரக் காலப்பிணைகளாகும். 1982இல் ரூபாக் கடன்களின் மொத்த மீளக் கொடுப்பனவுகள் ரூ. 2,250 இலட்சமாக அமைந்தன.

திறைசேரி உண்டியல்கள் மீதான தேறிய கடன்பாடுகள் முந்திய ஆண்டின் ரூ. 41,200 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 34,000 இலட்சமாக அமைந்தன. இதன் விளைவாக 1982இன் முடிவில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் ரூ. 173,200 இலட்சமாக அமைந்தன. இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்கள் மீதான உச்சவரம்பு ரூ. 180,000 இலட்சத்திலிருந்து ரூ. 230,000 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டது. வங்கித்துறை வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் 1981 இன் ரூ.137,740இலட்சத்திலிருந்து 1982இல் ரூ. 171,730 இலட்சத்திற்கு அதிகரித்தன. இதில் மத்திய வங்கியின் உடைமைகள் ரூ. 28,320 இலட்சத்தினால் ரூ. 165,930 இலட்சத்திற்கு அதிகரித்தன. வர்த்தக வங்கிகளின் உடமைகள் ரூ. 130 இலட்சத்திலிருந்து ரூ. 5,800 இலட்சத்திற்கு அதிகரித்தன. வங்கியல்லாத் துறையின் உடமைகள் முந்திய ஆண்டினைப் போன்று ஏறக்குறைய அதேயளவான ரூ. 1,470 இலட்சமாக விளங்கின. மத்திய வங்கியல்லாத வங்கித்துறை உதவுநர்களுக்குப் பொருத்தமான திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிவீதம் ஆண்டு முடிவில் ஆண்டுக்கு 13.5 சத வீதத்திற்கு அதிகரித்த வேளையில் மத்திய வங்கியின் வீதம் 13 சதவீதமாக மாற்றமுறாதிருந்தது.

நாணயவிதிச்சட்டத்தின் 89ஆம் பிரிவின்கீழ் அரசிற்கான மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்கள் முந்திய ஆண்டின் ரூ. 910 இலட்ச வீழ்ச்சிக்கு மாறாக 1982இல் ரூ. 6,040 இலட்சத்தினால் அதிகரித்தன. 1982 முடிவில் வெளிநின்ற மொத்தத்தொகை ரூ. 21,400இலட்சமாக விளங்கியது. இது பன்னாட்டு அமைப்புக்களுக்கான உதவுதொகைகளைச் செலுத்துவதற்காக 1980இல் அரசிற்கு வழங்கப்பட்ட ரூ. 3,080 இலட்சம்கொண்ட சிறப்புக்கடன்களையும் உள்ளடக்கும். ஆண்டு முடிவில் வெளிநின்ற வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ரூ. 109 இலட்சத்திலிருந்து

இவ்வாண்டில் அரசு 20 செயற்றிட்டக் கடன்களுக்கும், 6 பண்டக் கடன் களுக்கும் 3 காசு, ஏனைய கடன்களுக்கும் ஒப்பந்தம் செய்தது. 1982 திசெம்பர் 31இன் முடிவில் இக்கடன்களின் பெறுமதி ரூ. 121,440 இலட்சமாக விளங்கியது. ஒப்பிடுகையில் முந்திய ஆண்டில் ஒப்பந்தம் செய்யப்பட்ட கடன்களின் பெறுமதி ரூ. 144,640 இலட்சமாகும். ஒப்பந்தம் செய்யப்பட்ட கடன்களின் பயன்பாட்டு வீதத்தினைப் பொறுத்தவரையில் இவ்வாண்டின்போது எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. 1970 தொடக்கம் ஒப்பந்தம் செய்யப்பட்ட கூட்டு மொத்த கடன்களின் பயன்பாட்டு வீதம் 1982 இறுதியில் 50 சதவீதமாக அமைந்து, 1981ஆம் ஆண்டைப் போன்றே இருந்தது. செயற்றிட்டக் கடன்களின் பயன் பாட்டு மட்டம் 29 சதவீதமாக விளங்கியவேளையில் பண்டக்கடன்களும், காசும் ஏனைய கடன்களும் முறையே மிக உயர்ந்த வீதமான 81 சதவீதத்தையும் 84 சத வீதத்தினையும் பதிவு செய்தன. முந்திய ஆண்டில் முழுமையாகப் பயன்படுத்தப் பட்ட மிகவும் செலவுமிக்க காசுக் கடன்கள் ஆய்வுக்குரிய ஆண்டில் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1982இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஐ. அ. டொலர்கள் 1,000இலட்சங்கொண்ட யூரோ நாணய வர்த் தகக் கடனில் 400இலட்சம் டொலர் மட்டும் இவ்வாண்டில் பயன்படுத்தப்பட்டது. 1982இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஏனைய கடன்களில் ரூ. 15,440 இலட்சங் கொண்ட 5 கடன்களிலிருந்து 1982 முடிவுவரை எடுப்பனவுகள் எதுவும் ஆரம் பிக்கப்படவில்லை.

பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் இவ்வாண்டில் ரூ. 50,860 இலட்சமாக அமைந்தன. ரூ. 41,710 இலட்சங்கொண்ட தொகை உள்நாட்டுப் படு கடனுக்குச் செலுத்தப்பட்ட வேளையில் மீதி ரூ. 9,150 இலட்சமும் வெளிநாட் டுப் படுகடனுக்குச் செலுத்தப்பட்டது. இவ்வாண்டில் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 39சதவீதத்தினால் அதிகரிக்க வெளிநாட்டுப்படு கடன் மீதான வட்டி 28 சதவீதத்தினால் அதிகரித்தது. உள்நாட்டுப்படுகடன் மீதான வட்டி ரூபாக்கடன் மீதான ரூ. 21,670 இலட்சத்தினையும், திறைசேரி உண்டியல்கள் மீதான ரூ. 20,010 இலட்சத்தினையும் நிருவாகக் கடன்பாடுகள் மீதான ரூ. 30 இலட்சத்தினையும் கொண்டிருந்தது. திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் 53 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தவேளை யில் ரூபாக் கடன்கள் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் கடந்த ஆண்டினைவிட 28 சதவீதத்தினால் அதிகரித்தன. நிருவாகக் கடன்பாடுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் மாற்றமுறாதிருந்தன.